**தலைப்பு 147 – பிரதேச அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 147 – பிரதேச அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 17 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 634.43 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 540.60 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 93.83 மில்லியன் அதாவது 14.79 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 469.93 | 421.16 | 48.77 | 10.38 |
| மூலதனம் | 164.50 | 119.44 | 45.06 | 27.39 |
| **மொத்தம்** | **634.43** | **540.60** | **93.83** | **14.79** |

## 2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 14701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.00 | 0.66 | 0.15 | 0.35 | 3.50 | 2.00 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

வாக்குப்பேரேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்பட்டிருக்காத அதேநேரம் அமைச்சானது பின்வரும் பேரேடுகளையும் பராமரித்திருக்கவில்லையென கணக்காய்வுத் தெரிவுச்செவ்வையில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய நிதிப்பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை | பராமரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கணனிகள், உபகரணங்கள் மற்றும் மென்பொருட்களிற்கான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை | பராமரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (iii) | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப்பணங்கள்) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 134 (1) இன் பிரகாரம் நிதிசார் மற்றும் செயலாற்றல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையை நடாத்துதல்

2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபை நடாத்தப்பட்டு அதற்கான அறிக்கைகள் 2017 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வின் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். இருந்தபோதிலும், அமைச்சானது காலதாமதத்துடன் 2017 ஒக்டோபர் 10 இல் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்திருந்தது.

### 3.4 செயலாற்றல்

அமைச்சின் முக்கிய செயற்பாடுகளுக்கிடையிலான பின்வரும் நடவடிக்கைகளின் நிறைவேற்றலிற்காக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

| | நடவடிக்கைகள் | வழங்கப்பட்ட ஏற்பாடுகள் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் செயன்முன்னேற்றம் | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| (i) | கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை முறைமையாக்கல், கண்காணித்தல் மற்றும் பிரதேுச அபிவிருதத்தி மற்றும் தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் மீள்குடியேற்றல் அதிகாரசபையின் (ஹதபிம அதிகாரசபை) கீழ் வருகின்ற ஊழியர் தொடர்பாக செய்தல் மற்றும் மதிப்பிடுதல் | 66.0 | 89.58 | வழங்கப்பட்ட ஏற்பாடுகளை ரூபா 23.58 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய வேலை முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கைத்தொழில்கள் மேம்படுத்தலை உள்ளடக்கி பிரதேச அபிவிருத்தி வலுப்படுத்துவதற்கான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் ஒருங்கிணைத்தல் | 1.20 | 0.10 | 06 நடவடிக்கைகளில் 05 நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்டு 40 சதவீதம் தொடக்கம் 50 சதவீத வீச்சிலிருந்தது. |
| (iii) | நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை மற்றும் அனுராதபுர மாவட்டங்களிலுள்ள குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 0.80 | 0.06 | 0.08 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதிலும் 0.06 மில்லியன் மாத்திரத்தை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளின் நிறைவேற்றுதலின் செயன்முன்னேற்றமானது 10 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரையிலான வீச்சிலிருந்தது. |

## 3.5 முகாமைத்துவ குறைபாடுகள்

பின்வரும் முகாமைத்துவ குறைபாடுகள் கணக்காய்வு தெரிவுச்செவ்வையில் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சானது சதுர அடியொன்று ரூபா 160 இற்கு ரூபா 10.69 மில்லியன் அலுவலக இடத்திற்காக தனியார் நிறுவகத்திடமிருந்து மாதாந்த வாடகை அடிப்படையில் 49,556 சதுர அடியிலான கட்டிடத்தை வாடகைக்கு எடுத்திருந்தது. அரச மதிப்பீட்டாளர் சதுர அடியொன்றிற்கு ரூபா 121 வீதம் மதிப்பிட்டிருந்த போதிலும், ரூபா 1.93 மில்லியன் தொகை மாதமொன்றிற்கு சதுர அடி ரூபா 39 வீதத்தில் தனியார் நிறுவனமொன்றிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
வாடகைக்கு விடப்பட்ட கட்டிடத்தின் சதுர அடியினை மிஞ்சி சதுர அடியொன்றின் ரூபா 30 வீதத்தில் 9,452 சதுர அடிக்காக சேவைகள் கட்டணங்களாக ரூபா 283,560 தொகை மேலதிகமாக செசலுத்தப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 835(2) (உ) ஆம் பிரிவின் பிரகாரம், வாடகை உடன்படிக்கைக்கு முரணாக உடன்படிக்கை காலப்பகுதி 03 வருடங்களை மிஞ்சாத வகையில் 05 வருடங்கள் காலப்பகுதியினுள் ஈடுபடுத்தப்பட வேண்டும். அமைச்சரவையின் அங்கீகாரம் இது தொடர்பில் பெறப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் அலுவலக கட்டிடங்களில் அறைகளின் பகுதியின் ஒப்பந்தம் உடன்படிக்கையில்லாமல் கட்டிட திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. இது தொடர்பில் இரண்டு சிட்டைகள் மீது ரூபா 31.15 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பிடிகாசு கழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 04 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 03 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 42 | 09 | 33 |
| (iv) | ஆரம்ப நிலை | 22 | 13 | 09 |
| (v) | ஏனையவை | | | |
| | - ஒப்பந்த அடிப்படை | 66 | - | 66 |
| | - தற்காலிகம் | 06 | 02 | 04 |
| | **மொத்தம்** | **151** | **31** | **120** |